# ஹம்பாந்தோட்டை நகர சபை

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஜூன் 10 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஜூலை 02 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் ஹம்பாந்தோட்டை நகர சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹம்பாந்தோட்டை நகர சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,044,581 இற்கான சொத்துக்களின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 313,235 இற்கான வீதவரி ரூபா 11,537 இற்கான வாடகை வருமானம் வருமானப் முற்பெறுவனவு என செலவு வைக்க வேண்டும். எனினும் பிழையான முறையில் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.

(இ) முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 195,509 இற்காக நூலகப் புத்தகங்களை மூலதனச் சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்கள் விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 7,810 தொகை மூலதனச் சொத்துக்கள் விற்பனையின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது சந்தையின் கடை வாடகையாகக் கிடைத்திருந்த ரூபா 3,150 தொகை, கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் இரு முறை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டின் போது களஞ்சிய பண்டங்கள் வினியோகத்தின் பெறுமதி ரூபா 1,898 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 78,091 இற்கான செலவுகள் மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்வதற்கு பதிலாக மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 2009 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உருப்படி சரிபார்த்தல் அறிக்கையின் பிரகாரம் 2010 திசெம்பர் 10 திகதி பண்டங்கள் மற்றும் உபகரண விடயங்கள் 48 இனை ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது எனினும் அவற்றின் கிரயத்தை சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 4,677,740 இற்கான வாடிவீட்டு கட்டண வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டிற்கான வீதி விளக்குகள் பராமரிப்பு விடயங்களுக்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 190,380 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) ஹம்பாந்தோட்டை பஸ் தரிப்பு நிலையத்தின் மின்சார பில்பத்திரத்தினை தீர்ப்பதற்காக 2010 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 20,615 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதி மன்றத் தண்டப் பண வருமானம் என்பவற்றை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,138,542 ஆக காணப்பட்டதுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அவற்றின் பெறுமதி ரூபா 4,731,574 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 1,406,968 ஆகும்.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 9,700,234 தொகைக்கான 05 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.4 நீண்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட மீதிகள்

பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்காமையால் நிலுவையாகவுள்ள மின் கட்டணம் ரூபா 957,424 தொகை நீண்ட காலமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம்

(i) நி.பி. 371(2) இன் பிரகாரம் ஏதேனும் ஒரு கருமதத்திற்காக வழங்கப்பட்ட துணைக் கட்டுநிதிகள் அது வழங்கப்பட்டிருந்த கருமம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 26,070 இற்கான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி. 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் வாகனங்களின் மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புடன் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது 03 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) தென் மாகாண சபை நிதிப் பிரமாணம்

223.1 விதியின் பிரகாரம் அலுவலர்களினால் எந்த விதத்திலேனும் மாகாண சபையின் நிதி தனிப்பட்ட கணக்கொன்றில் வைப்புச் செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. எனினும் அதற்கு முரணாக நகர சபையின் முகாமைத்துவச் சேவை II பெண் அலுவலர் ஒருவர் சபைக்கு சொந்தமான ரூபா 59,246 தொகையினை தனது சொந்த கணக்கில் சுமார் 03 வாரங்கள் தடுத்து வைத்து பயன்படுத்தியுள்ளார்

02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 112,005 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,882,662 ஆகக் காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா000’ | ரூபா 000’ |
| வீத வரி மற்றும் வாடகை | 3,120 | 2,495 | 1,699 | 3,150 | 2,460 | 2,917 |
| வாடகை | 6,025 | 8,442 | 2,437 | 7,968 | 5,910 | 2,057 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 505 | 505 | - | 721 | 721 | - |
| சேவைக் கட்டணம் | 2,021 | 2,360 | 98 | 2,127 | 1,773 | 354 |
| எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் | 325 | 325 | - | 561 | 561 | - |
| ஏனைய வருமானங்கள் | 655 | 360 | 295 | 2,113 | 2,113 | - |

2.2.2 நிலுவை வீத வரி

---

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(1) மற்றும் (2) இன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரை சபைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,079,777 இற்கான நிலுவை வீத வரியினை அறவீடு செய்திருக்கவில்லை.

2.3 செலவினக் கட்டமைப்பு

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 23,247 | 21,579 | 1,668 | 19,175 | 19,500 | (325) |
| ஏனையவை | 9,245 | 8,708 | 537 | 8,778 | 8,476 | 302 |
| உப கூட்டுத் தொகை | 32,492 | 30,287 | 2,205 | 27,953 | 27,976 | (23) |
| மூலதன செலவுகள் | 1,710 | 8,336 | (6,626) | 1,100 | 2,526 | (1,426) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 34,202 | 38,623 | (4,421) | 29,053 | 30,502 | (1,449) |

2.4 மனித வள முகாமைத்துவம்

---

2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

---

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவியணி தரம் | 02 | 01 |
| இரண்டாம் தரம் | 17 | 15 |
| ஆரம்ப தரம் | 47 | 39 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 47 |

(ஆ) 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய இலக்கம் 28, 2006 மே 10 திகதிய இலக்கம் 28(i), 2006 ஆகஸ்ட் 01 திகதிய இலக்கம் 28(ii) கொண்ட முகாமைத்துவ சேவை சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு முரணாக முறையான அங்கீகாரம் இன்றி சபையினால் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்கள் 47 பேர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தி சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,824,184 ஆக காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 957,424 ஆகும்.

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,284,186 ஆகும்.

(ஆ) சபையில் கடமையாற்றிய பின்னர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மூன்று அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 159,838 இற்கான பதவியணிக் கடன் மீதிகள் ஒரே முறையில் அறவீடு செய்யாமல் தவணைகளாக அறவிடப்படுகின்றது.

### 2.5.3 அசையாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 திகதயில் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய காலம் அசையாது காணப்படும் பொதுக் களஞ்சியச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 19,531 ஆகும்.

## 2.6 செயற்பாட்டுத் திறமையின்மை

நகர சபையினால் 2009 ஆண்டின் போது உள்ளூராட்சி வாரம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தினத்திற்காக இணையத்தளம் ஒன்று ஆரம்பிப்பதற்காக 2010 ஆண்டின் போது ரூபா 72,680 தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது. இணையத்தளம் ஒன்று நிறுவப்பட்டு செயற்படுத்தியது இரண்டு வாரங்கள் போன்ற சிறு காலப்பகுதி மாத்திரமே என அவதானிக்கப்பட்டதுடன்,

முறையான ஆய்வு ஒன்று மேற்கொள்ளாமல் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக பணம் செலுத்துதல் மற்றும் செயற்திட்டத்தினை கைவிடல் முகாமைத்துவத்தின் செயற்திறமையற்ற தன்மை ஒன்றென அவதானிக்கப்பட்டது.

2.7 புத்தகங்கள் பதிவேடுகள் பேணுவதில் குறைபாடுகள்

சபையினால் பேணப்பட வேண்டிய 03 பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபையினால் பேணப்பட வேண்டிய 03 பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

2.8 அகக் கணக்காய்வு

சபையின் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்கொடுத்தோர்/ கடன்பட்டோர் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு